

முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டரின் அவர்கள், சென்னை – கோபாலபுரத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர்கள் ரிஷிவந்தியம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., உளுந்தூர் பேட்டை எம்.எல்.ஏ., ஜி.வசந்தவேலு, புலவர் முத்து வாவாசி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தி.மு.க., தோல்வியில் வெற்றி!
த.வெ.க., வெற்றியில் தோல்வி!

இடைத் தேர்தல் முடிவுகள் குறித்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, அக்.11-

முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் நினைவு நாளான நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை 'முரசொலி' அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்கள் இடைத்தேர்தல் முடிவு குறித்து தொடுத்த வினாவிற்குப் பதிலளித்த கழகத் தலைவர் அவர்கள்: தி.மு.க.வைப் பொறுத்தவரை தோல்வியில் வெற்றியடைந்துள்ளது. த.வெ.க. வெற்றியில் தோல்வி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் அவர்கள் கூறியதாவது:-

"மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் முடிவு குறித்து ஏற்கனவே தாம் விரிவாக அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். ஒரே வார்த்தையில் கூறவேண்டும் என்றால், தி.மு.க.வைப் பொறுத்தவரை தோல்வியில் வெற்றியடைந்துள்ளது; அதேநேரம், த.வெ.க. வெற்றியில் தோல்வியடைந்துள்ளது!" இதுவே எனது கருத்து.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மண்ணை விட்டு மறைந்தாலும் என் மனதை விட்டு அகலாத – பேரன்பிற்குரிய

செல்வம் அண்ணனின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்!

நினைவு நாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, அக். 11-

முரசொலி செல்வம் அவர்களின் நினைவுநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "மண்ணை விட்டு மறைந்தாலும் என் மனதை விட்டு அகலாத பேரன்புக்குரிய செல்வம் அண்ணன் அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"என் வாழ்வில் கிடைத்தற்கரிய பெருஞ்செல்வமாக நான் பெற்றிருந்த அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாள்.

தலைவர் கலைஞரே அவருக்குப் பெயர்சூட்டி, தாயைப் போல வளர்த்தெடுத்தார். கலைஞரின் நிழலில் வளர்ந்த செல்வம் அவர்கள் கழகப்பணி செய்வதைத் தவிர வேறு எதுவும் அறியாதவர்,



எதையும் நாடாதவர்.

செல்வம் அவர்கள் எனக்கு அண்ணனாகவும் இருந்திருக்கிறார், ஆசானாகவும் இருந்திருக்கிறார், நெருக்கடியான நேரங்களில் ஆறுதலாகவும் இருந்திருக்கிறார்.

மண்ணைவிட்டு மறைந்தாலும் என் மனதைவிட்டு அகலாத பேரன்புக்குரிய செல்வம் அண்ணன் அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





கழகத்தின் அறிவுச்செல்வம் `முரசொலி' செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி, `முரசொலி' அலுவலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்ட படத்துக்கும், கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்துக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் உடன் உள்ளார்கள்.





ஜப்பானில் நடைபெற்ற 20th Asian Gamesல் 42 ஆண்டுகளுக்குப் பிறகு 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் 54.75 விநாடிகளில் இலக்கைக் கடந்து புதிய சாதனை படைத்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக ஆட்சிக்காலத்தில் அவரது திறமைக்கு துணை நிற்கும் வகையில் அரசு சார்பில் வழங்கப்பட்ட உதவிகள் ஊக்கத்தொகை உள்ளிட்டவைக் குறித்து எடுத்துரைத்து அன்பை வெளிப்படுத்தினார். அடுத்தடுத்து பல்வேறு சர்வதேச போட்டிகளில் களம் காணவுள்ள தங்கை வித்யா ராம்ராஜின் பதக்கப்பயணம் தொடரட்டும் என வாழ்த்தினார்.

மனித குலத்தின் மேன்மைக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள

நவநீதம் பிள்ளையின் பணிகளைப் போற்றுவோம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, அக்.11-

மனிதகுலத்தின் மேன்மைக்காகவும் அமைதிக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள நவநீதம் பிள்ளை அவர்களின் பணிகளைப் போற்றுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

உலக அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தேர்வாகி இருக்கும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த திருமிகு. நவநீதம் பிள்ளை அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



உலகெங்கும் நிறவெறி, ஒடுக்குமுறை, மனித உரிமை மீறல் போன்ற பல்வேறு அடக்குமுறைகளுக்கு எதிராக துணிச்சலுடன் குரல் கொடுப்பதோடு - களப்போராட்டத்தையும் முன்னெடுத்து வரும் அவரது பணிகள் போற்றத்தக்கவை.

மனிதகுலத்தின் மேன்மைக்காகவும் - அமைதிக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள திருமிகு. நவநீதம் பிள்ளை அவர்களின் பணிகளைப் போற்றுவோம்.

அவருக்கு கிடைக்கவிருக்கும் 'நோபல் பரிசு', உலக அமைதிக்காக பாடுபட்டு வரும் ஒவ்வொருவருக்குமான ஊக்கமாக அமையட்டும்!

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, அக்.11-

மதுரை தெற்கு மாவட்ட திமுக செயல் வீரர்கள் கூட்டம் நாளை (12ஆம் தேதி திங்கள் கிழமை) திருமங்கலம் கொடி திருமண மஹாலில் நடைபெற உள்ளதாகவும் இதில் திமுக நிர்வாகிகள் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க புதிதாக கழக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும் கழகத் தலைவரின் ஆலோசனையின் படி அமைக்கப்பட்டுள்ள கழக மறு சீரமைப்புக்குழு மூலம் ஒன்றிய, நகர, பகுதிக்கழக, வட்டக் கழக, பேரூர் கழகங்கள் வாக்காளர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிதாக உருவாக்கப்பட உள்ளது இது தொடர்பான மதுரை தெற்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (12.10.2026 திங்கள் கிழமை) காலை 10.00 மணி அளவில் திருமங்கலம் கொடி திருமண மண்டபத்தில் எனது தலைமையிலும், தலைமை கழக பிரதிநிதிகள் பி.டி.சி செல்வராஜ், மூத்த வழக்கறிஞர் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கிளைக்கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் மூலம் கழகத் தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாள் திருவாரூர் கலைஞரின் இல்லத்தில் கடைப்பிடிக்கப் பட்டது. அது சமயம் தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர், இரா. சங்கர், வர்த்தக அணி மு.செயலாளர் டி.எஸ்.எம். முத்துக்குமரசாமி, மாநில, இசை வேளாளர் சங்க துணைத் தலைவர் சோமாஸ்கந்தன், ஒய்வுபெற்ற இணை ஆணையர் கஜேந்திரன், ஒய்வுபெற்ற வட்டாச்சியர் கலைச்செல்வன், ஐஸ்வர்யா சீனு மற்றும் பலர் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.